

17-2

# Jesus Heals two Blind men

## இயேசு இரண்டு குருடர்களை சொஸ்தமாக்கினார்

## மத்தேயு 9 : 27–31

இயேசு எதையும் பார்க்க முடியாத இரண்டு மனிதர்கயை சந்தித்தார். உங்கள் கண்களை நீங்கள் மூடிக் கொண்டால் குருட்டுத்தன்மை எப்படியிருக்கும் என்று உங்களால் சொல்ல முடியும். எல்லாம் இருட்டாயிருக்கும். இந்த குருடர்கள் இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டார்கள். அவர்கள் அவரை பின் தொடர்ந்து போய் வெகு சத்தமாய் அழுது கூப்பிட்டார்கள். "தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்" என்று கூப்பிட்டார்கள். இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டு என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆம் ஆண்டவரே! என்றார்கள். அப்பொழுது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக் கடவது என்றார். உடனே குருடராயிரந்த மனிதருடைய கண்கள் திறக்கப்பட்டது, அவர்களால் பார்க்க முடிந்தது.

## ஜெபம்

கர்த்தவே நீர் எல்லோருக்கும் இரட்சகராயிப்பதற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னித்து முடிவில் எங்களையும் உம்மோடு கூட பரலோகம் எடுத்துச் செல்லும். ஆமென்.

### வளர்த்த பிள்ளைகளுக்குரிய வேதமனப்பாட வசனம் மத்தேயு 28:18

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது."